உ

சிவமயம்.

மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்தர்

ஆதீனத்தைச் சேர்ந்த

# திருப்புறம்பயத் தலவரலாறு.



திருப்புறம்பயம்

ஸ்ரீ சாட்சிநாதஸ்வாமி தேவஸ்தான

வெளியீடு.



மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்தர்
ஆதீனம், 290-வது பட்டமாக
எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய ஸ்வாமிகள்.

# முன்னுரை.

அன்பர்களே!

மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம் 290-வது பட்டமாக எழுந்தருளியிருக்கும் **ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய ஸ்வாமிகளின்** திருவுள்ளப் பாங்கின்படி இத்தல வரலாறு வெளிவருகின்றது. சாஸ்திர சம்பந்தத்தாலும், சரித்திர சம்பந்தத்தாலும் இத்தலம் முதன்மையான சிறப்புடைய தென்பதை இதன் வரலாற்ருல் அறியலாம். இவ்வரலாற்றைக் கல்வெட்டு, சரித்திரம் முதலியவற்றின் ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் திருவாளர் **வித்துவான் அ. சதாசிவ பண்டாரத்தார்** அவர்கள் கைமாறு கருதாமல் எழுதியுதவினுர்கள். அவர்கள் இப்போது அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சித் துறை அறிஞராக வேலைபார்த்து வருகிருர்கள். அவர்கட்கு ஸ்ரீ சாக்ஷிநாதஸ்வாமி தேவஸ்தானத்தின் சார்பான நன்றி உரியது. எங்கள் போன்ருரையெல்லாம் சிவப்பணியிலீடுபடும் படி செய்த எங்கள் மகாசந்நிதானத்தின் திருவருளுக்கு நாங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

இங்ஙனம்,

***K. G. கல்யாணசுந்தரம்,***

சூப்ரிண்டெண்டெண்ட்,

ஸ்ரீ சாக்ஷிநாதஸ்வாமி தேவஸ்தானம்,

திருப்புறம்பயம்.



திருப்புறம்பயம்—கோயில்.

உ
சிவமயம்.

மதுரை ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகள்
ஆதீனத்தைச் சேர்ந்த

# திருப்புறம்பயத் தலவரலாறு.

## இருப்பிடம்:—

திருப்புறம்பயம் என்பது தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலூகாவிலுள்ள ஒரு சிவத்தலம் ஆகும். இது கும்பகோணத்திற்கு வடமேற்கே ஐந்து மைல் தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையில் இருக்கின்றது. கும்பகோணம் புகைவண்டி நிலையத்தில் இறங்கிக் காவேரியாற்றின் வடகரை வழியாக மேற்கே சுவாமிமலைக்குச் செல்லும் கற்சாலையில் இரண்டு மைல் சென்று புளியஞ்சேரி என்ற ஊரை அடைந்து அங்கிருந்து வடக்கே கொள்ளிடத்திற்குச் செல்லும் மண்சாலையில் மூன்று மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம். இத்தலத்திற்குத் தெற்கே இரண்டு மைலில் திருஇன்னம்பரும், மேற்கே மூன்று மைலில் திருவைகாவூரும், வடக்கே மூன்று மைலில் கொள்ளிடத்தின் வடகரையில் கோவந்தபுத்தூர் என்று வழங்கும் திருவிசய மங்கையும், கிழக்கே எட்டு மைலில் சண்டேசுர நாயனாரது திருச்சேய்ஞலூரும், திருப்பனந்தாளும் உள்ளன. சைவ சமயாச்சாரிய சுவாமிகளால் பாடப்பெற்றனவாய்ச் சோழ வளநாட்டில் காவிரியாற்றிற்கு வடக்கேயுள்ள அறுபத்துமூன்று சிவத்தலங்களுள் இத்திருப்புறம்பயமும் ஒன்றாகும். இதற்கு கல்யாணமாநகர், புன்னாகவனம் என்ற பெயர்களும் உண்டு.

## கோயில்:—

ஊரின் நடுவில், திருக்கோயில் கிழக்கு நோக்கிய திருவாயிலுடையதாக இருக்கின்றது. இதற்கு

ஆதித்தேச்சுவரம் என்ற பெயர் முற்காலத்தில் வழங்கி வந்தது இதிலுள்ள கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. இப்பெயர் பிற்காலத்தில் வழக்கற்றுப் போனமைக்குக் காரணம் தெரியவில்லை. திருக்கோயில் கீழ் மேல் 391 அடி நீளமும்,தென்வடல் 232 அடி அகலமும் உடையது.எனவே கோயிலின் பரப்பு சுமார் 90712 சதுர அடியாகும். கோயிலில் இரண்டு பிராகாரங்கள் உள்ளன. முதற் பிராகாரம் திருச்சுற்று மாளிகையுடன் அமைந்துள்ளது. முதற் பிராகாரத்தின் திருவாயிலை திருமாளிகைத்திருவாயில் என்று வழங்குவது முற்கால வழக்கம். ஓர் அழகிய சிறு கோபுரம் இங்கு இருக்கின்றது. இரண்டாம் பிராகாரத் திருவாயிலாகிய திருத்தோரண வாயிலில் ஐந்து நிலைக் கோபுரமொன்று எழிலுடன் விளங்குகின்றது. இது சுமார் 81 அடி உயரம் உள்ளது. இவ்வூர் 3000 ஜனத்தொகையுள்ளது. சிறு நகரம் போல் தோற்றமுடையது.

**மூர்த்திகள்:—**

திருக்கோயிலில் மூலத்தானத்தில், எழுந்தருளியுள்ள இறைவனுக்குச் சாட்சிநாதர், சாட்சீசுவரர் என்ற பெயர்களும், அம்பிகைக்குக் கரும்படுசொல்லி என்ற பெயரும் வழங்கி வருகின்றன. கல்வெட்டுகளில் திருப்புறம்பயமுடைய நாயனர், திருப்புறம்பயமுடைய மகாதேவர், திருப்புறம்பயமுடைய பட்டாலகர், திருப்புறம்பயமுடைய தம்பிரானர் என்ற பெயர்களே காணப்படுகின்றன. திருஞானசம்பந்த சுவாமிகள் தாம் அருளிய தேவாரத் திருப்பதிகத்தில் புறம்பயமமர்ந்த இறையோன் எனவும் புறம்பயமமர்ந்த உரவோன் எனவும் குறிப்பிட்டுள்ளனர். அன்றியும் திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்புறம்பயப் பதிகம் ஐந்தாம் பாட்டில் “கரும்பொடு படுஞ்சொலின் மடந்தையை மகிழ்ந்தோய்” என்ற பகுதியில் அம்பிகையின் பெயர் குறிக்கப் பெற்றுள்ளது. அம்பிகைக்குக் குறைவிலா அழகி என்ற பெயரும் உண்டு என்பது திருப்புறம்பயப்

புராணத்தால் அறியப்படுகின்றது. ஒரு வணிக மங்கையின் திருமண நிகழ்ச்சி பற்றி மதுரைமா நகரில் சான்று கூறி அவள் துன்பம் நீக்கிய காரணத்தால், சாட்சிநாதர் என்ற பெயர் புறம்பயத்தெம்பெருமானுக்கு வழங்கி வரலாயிற்று. இவ்வரலாற்றைத் தலபுராணத்தில் விரிவாகக் காணலாம்.

கோயிலின் மகாமண்டபத்திற்கு வெளியே தென்கிழக்கில் பிரளயங்காத்த பிள்ளையார் கோயில் ஒன்று உளது. இப்பிள்ளையார் திருவுருவம், சந்தன நிறம் பொருந்திய ஒருவகைக்கல்லால் அமைந்திருக்கிறது. இது சுயம்புமூர்த்தி என்று சொல்லப்படுகிறது. இதன் திருமேனியில் சங்கும், இப்பியும் காணப்படுகின்றன என்று அருகிற்சென்று பார்த்தோர் கூறுகின்றனர். இம்மூர்த்தியை இப்பொருள்களைக் கொண்டு, வருணன் வழிபட்டதாகத் தலபுராணம் உரைக்கின்றது. இராகுவந்தர கற்பத்தில் உண்டான ஒரு பிரளயத்தில் இவ்வூர் அழியாதவாறு காத்தருளினமை பற்றி இப்பிள்ளையார் பிரளயங்காத்தவர் என்ற பெயர் அடைந்தனர். இதனைத் தலபுராணத்தில் விளக்கமாகக் காணலாம்.

முதற் பிராகாரத்தில் தென்திருச்சுற்று மாளிகையில், சைவ சமயாச்சாரிய சுவாமிகள் நால்வர் விக்கிரஹங்களும், மேலைத்திருச்சுற்று மாளிகையில், அகத்தியர் புலத்தியர், சனகர், சனந்தனர், விசுவாமித்திரர், இமயாசலவேந்தன், விந்தாசலவேந்தன் ஆகிய பெரியோர்கள் சிவலிங்கங்களை எழுந்தருளுவித்து வழிபாடு புரிந்தனர் என்று தலபுராணத்தில் சொல்லப்பட்டுள்ள சிவலிங்கங்களும் இருக்கின்றன. இச்சிவலிங்கங்களுள் இரண்டைப் பற்றிய உண்மை வரலாற்றை பின்வரும் கல்வெட்டும் சரித்திரமும் என்ற பகுதியிற் காண்க. இரண்டாம் பிராகாரத்தில் வடகிழக்குப் பகுதியில் அம்பிகைக்குத் தனிக் கோயில் இருக்கின்றது.

இரண்டாம் பிராகாரத்திற்கு வெளியே ஐந்துநிலைக் கோபுர வாயிலுக்குக் கீழ்ப்புறத்தில் திருக்குளத்தின் தென்கரையில் தக்ஷிணாமூர்த்தி (அறமுரைத்த நாயனார்) கோயிலும், கீழ வீதியில் மேற்கு நோக்கிய மிகப்பெரிய விநாயகர் கோயில் ஒன்றும் இருக்கின்றன. ("நால்வர்க் கறம் பயனுரைத்தனை புறம்பயமமர்ந்தோய்" என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்கும் புறம்பயமதனில் அறம்பல அருளியும் என்ற மணிவாசகப்பெருமான் திருவாக்கும் அன்பர் ஒருவர் உள்ளத்தைக் கவர்ந்து, அறமுரைத்த நாயனார்க்குத் தனிக்கோயில் எடுப்பித்து வழிபாடு செய்யும்படி செய்து விட்டன என்று தெரிகிறது. இச்செய்தியைக் கல்வெட்டும் சரித்திரமும் என்ற பகுதியில் தெளிவாகக் காணலாம்.)

**தலவிருட்சமும், தீர்த்தங்களும்:-**

இத்தலத்திற்குரிய விருட்சம் புன்னையாகும். அது கோயிலின் முதற்பிராகாரத்தின் வடமேற்குப் பகுதியில் இருக்கிறது. அது மிகப் பழமைவாய்ந்தது என்பது பார்ப்போர்க்கு நன்கு புலப்படும். இரண்டாம் பிராகாரத்தில் தென் கிழக்குப் பகுதியில் மடைப்பள்ளிக்கு மேற்புறத்தில் ஒரு வன்னிமரம் இருக்கிறது. அது தல விருட்சமன்று. ஆயினும், வணிக மாதின் திருமண நிகழ்ச்சிக்குச் சான்றுகளாக இருந்தவற்றுள் வன்னிமரமும் ஒன்றாதலால் அதற்கறிகுறியாக அம்மரம் நிற்கின்றது. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திலும், தல புராணத்திலும், இவ்வரலாறு கூறப்பட்டுள்ளது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற ஐம்பெருங் காவியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில் "வன்னிமரமும் மடைப்பள்ளியுஞ் சான்றாக - முன்னிறுத்திக்காட்டிய மொய்குழலாள்" என்று இச்செய்தி சொல்லப்பெற்றிருக்கிறது.

கோயிற் கருகில் வடகிழக்கில் பிரம தீர்த்தம் என்ற திருக்குளம் உளது. தல புராணத்தில் இதன்

பெருமை கூறப்பட்டிருக்கிறது. இத்திருக்குளத்தின் கீழ்கரையில் சத்தசாகர தீர்த்தம் என்ற எழுகடற்பெருங் கிணறு ஒன்றும் இருக்கிறது. உலகைப் பிரளய காலத்தில் அழித்தற்குப் பொங்கி எழுந்த ஏழு கடல்களும் இறைவன் ஆணையால் அடங்கி அதனுள் தங்கியிருக்கிறது என்று தல புராணம் கூறும். கோயிலின் மேற்புறத்தில் ஒரு பொய்கையும், ஊரின் வடகிழக்கில் பொன்னியம்மன் குள மும் இருக்கின்றன. இவை முறையே சந்திர புட்கரணி என்றும், சூரிய புட்கரணி என்றும் தல புராணத்தில் கூறப்படுகின்றன. ஊருக்குக் கிழக்கே மண்ணியாறு தெற்கு வடக்காக ஓடும் பகுதியில் பூசத்துறை என்ற தீர்த்தச் சிறப்புவாய்ந்த துறை ஒன்றும் உளது. கோயி லுக்கு வடக்கே ஒரு மைலில் கொள்ளிடப் பேராறும் ஓடு கின்றது. பிரமோற்சவத்தின் இறுதி நாளிலும், கார்த் திகை மாதத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும், இறைவன் இடபாரூடராய் பரிவாரங்களுடன் எழுந்தருளி, பிரம தீர்த் தத்தில் தீர்த்தம் அருளுவது வழக்கம். அமாவாசை தோறும் சத்த சாகர கூபத்திற்கு இறைவன் எழுந்தருளித் தீர்த்தம் வழங்குவது பழைய வழக்கம். இது பல ஆண்டுக ளாக நின்றுவிட்டது. பிற தீர்த்தங்களில் ஆண்டிற்கு ஒரு முறை சில விசேட நாட்களில் தீர்த்தம் வழங்கி யருளுவதும் உண்டு.

**தலப்பெருமை:—**

இத்தலம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்திகள், மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமய குரவர் நால்வராலும் பாடப்பெற்ற பெருமையும், பழமையும் வாய்ந்தது. பெரிய புராணம் என்று வழங்கி வரும் திருத் தொண்டர் புராணத்தின் ஆசிரியராகிய சேக்கிழார் திங்கள் சூடிய செல்வர் மேவு திருப்புறம்பயம் எனவும்; போரின் மலியும் கரியுரித்தார் மருவும் புறம்பயம் எனவும்,

திசையுடை யாடையர் திருப்புறம்பயம் எனவும் இத் தலத்தைப் பாராட்டியுள்ளனர்.

ஆளுடைய நம்பிகளாகிய சுந்தரமூர்த்திகள், தம் தேவாரப் பதிகத்தில் செங்கண் சேவுடைச் சிவலோகனூர் எனவும், எங்கள் சங்கரன் வந்து தங்குமூர் எனவும் இத் தலத்தைச் சிறப்பித்துள்ளனர். அன்றியும், அப்பெரியார் மடையெலாங்கழுநீர் மலர்ந்து மருங்கெலாங் கரும்பாடத் தேன் புடையெலாமண நாறுஞ் சோலைப் புறம்பயம் எனவும், கங்கைநீர் புலமெலா மண்டிப் பொன் விளைக்கும் புறம்பயம் எனவும் இத்தலத்தின் நீர் நில வளங்களைத் தம் தேவாரப் பதிகத்தில் கூறியிருப்பது அறியத் தக்கதாகும். அடிகள் திருவாக்குப் பொய்யாதவாறு பல்வளங்களும் நிறைந்து இத்தலம் விளங்குவதை நேரிற் காண்போர் அறியாமற்போகார்.

**திருவிழாக்கள்:—**

ஆண்டுதோறும் மாசி மாதத்தில் பத்து நாட்கள் பிரமோற்சவம் நடைபெறுகின்றது. இதுவே இக்கோயில் திருவிழாக்களுள் பெரியது. ஐந்தாம் நாள் தன்னைத்தான் அருச்சிக்கும் சிறப்பும், ஏழாம் நாள் திருக்கலியாணமும், எட்டாம் நாள் சந்திரசேகரர் விழாவும், ஒன்பதாம் நாள் திருத்தேர் விழாவும், பத்தாம் நாள் மகத்தில் இறைவன் இடபாரூடராய் பரிவார தேவர்களோடு பிரமதீர்த்தத்திற்கு எழுந்தருளித் தீர்த்தம் வழங்கியருளும் காட்சியும் நிகழ்ந்து வருகின்றன.

இக்கோயிலுக்குரிய தேர்கள் பழுதுற்று விழாவிற்குப் பயன் படாமலிருந்தது. இச்செய்தியைத் திருப்பனந்தாள் குமரகுருபர சுவாமிகளது காசி மடத்தின் தலைவர் "காசிவாசி ஸ்ரீ சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்" பால் விண்ணப்பித்துக் கொண்டபோது அவர்கள் தம்மிடம் இருந்த தேர்களுள் ஒன்றை மனமுவந்து அளித்தனர்.

அத்தேரில்தான் இறைவன் இரண்டு ஆண்டுகளாகப் பிரமோற்சவத்தின் ஒன்பதாம் நாள் எழுந்தருளிக் காட்சியளித்து வருகின்றனர். அன்றியும், அம்மடத்தின் தலைவர் அவர்கள் கைலாயவாகனம் ஒன்றும், பல்லக்கு ஒன்றும், யாளி வாகனம் ஒன்றும், இக்கோயிலுக்கு வழங்கியுள்ளனர். வேள் பாரியைப்போன்ற அவர்களது வள்ளன்மை பெரிதும் பாராட்டற்குரியதாகும்.

ஆவணி மாதத்தில் பிரளயங் காத்த விநாயகருக்கு ஐந்து நாள் விழா சில அன்பர்கள் துணைகொண்டு தொடங்கி முன்போல் நடைபெற்று வருகிறது. இப்பிள்ளையார்க்கு ஆவணிச் சதுர்த்தியில் ஆண்டு தோறும் ஓர் ஆடம் தேன் அபிஷேகம் செய்யப்பட்டு வருகின்றது. இது தொன்று தொட்டு நடைபெற்று வரும் சிறப்புடைய விழாவாகும். மற்றய மாதங்களிலும் சிவாலயங்களில் நிகழ வேண்டிய விழாக்களும் குறைவின்றி நடைபெற்று வருகின்றன. நாள் தோறும் நான்கு கால பூசைகள் செய்யப்படுகின்றன.

**இத்தலத்தைப் பற்றிய நூல்கள்:—**

(1) தேவாரம், திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய பதிகம் ஒன்று, இது பதினொரு பாடல்களையுடையது. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருத்தாண்டகப்பதிகம் ஒன்று, இது பத்துப் பாடல்களைக் கொண்டது. சுந்தரமூர்த்திகள் அருளிய பதிகம் ஒன்று, இது பதினொரு பாடல்களை உடையது.

(2) மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் கீர்த்தித் திருவகவலில் "புறம்பயம்தனில் அறம்பல வருளியும்" என்று கூறியுள்ளனர்.

(3) பதினோராந்திருமுறை—பட்டினத்தடிகள் திருவேகம்பமுடையார் திருவந்தாதியில்,

"நினைவார்க்கருளும் பிரான் திருச்சோற்றுத் துறைநியமம்
புனைவார் சடையோன் புகலூர் புறம்பயம் பூவணநீர்
புனைவார் பொழில் திருவெண்காடு பாச்சில் அதிகையென்று
நினைவார் தருநெஞ்சினீர் கச்சி ஏகம்பம் நண்ணுமினே."

என்ற 61-ஆம் பாடலில் புறம்பயத்தைக் குறித்திருக்கின்றனர்.

## 4. பெரிய புராணம்:—

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணத்தில் அப்பெருமான் புறம்பயத்திற்கு எழுந்தருளி இறைவனை வணங்கித் திருப்பதிகம் பாடிய வரலாற்றைச் சேக்கிழாரடிகள் கூறுமிடத்து,

"விசயமங் கையினிடம் அகன்று மெய்யர்தாள்
அசைவில் வைகாவினில் அணைந்து பாடிப்போந்
திசைவளர் ஞானசம் பந்தர் எய்தினார்
திசையுடை ஆடையர் திருப் புறம்பயம்." (240)

"புறம்பயத் திறைவரை வணங்கிப் போற்றிசெய்
திறம்புரி நீர்மையிற் பதிகச் செந்தமிழ்
நிறம்பயில் இசையுடன் பாடி நீடிய
அறந்தரு கொள்கையார் அமர்ந்து மேவினார்." (241)

என்றுரைத்துள்ளனர்.

ஏயர் கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் புறம்பயத்திற்கு எழுந்தருளிய வரலாற்றை உரைக்குங்கால்,

ஏரின் மருவும் இன்னம்பர் மகிழ்ந்தரஇறைவர் கழல்வணங்கி
ஆரும் அன்பிற் பணிந்தேத்தி ஆரா அருளால் அங்கமர்வார்
போரின் மலியுங் கரியுரித்தார் மருவும் புறம்பயம் போற்றச்
சேரும் உள்ளம் மிக்கெழமெய்ப் பதிகம் பாடிச் செல்கின்றார்" (95)

"அங்கம் ஓதியோர் ஆறைமேற்றளி என்றெடுத் தமர்காதலில்
பொங்கு செந்தமிழால் விரும்பு புறம்பயந் தொழப்போதுமென்
"றெங்கும் மன்னிய இன்னிசைப் பதிகம் புனைந்துமே எய்தினார்
திங்கள் சூடிய செல்வர் மேவு திருப்புறம் பயஞ் சேரவே" (96)

"அப்பதிக்கண் அமர்ந்ததொண்டரும் அன்றுவெண்ணெய்நல் லூரினில்
ஒப்பருந்தனி வேதியன்பழ ஓலைகாட்டிநின் றுண்டவர்
இப்பதிக்கண் வந்தெய்த என்னதவங்கள் என்றெதிர் கொள்ளவே
முப்புரங்கள் எரித்த சேவகர் கோயில் வாயிலின் முன்னினர்" (97)

"நீடுகோபுர முன்பிறைஞ்சி நிலாவு தொண்ட ரொடுள்ளணைந்
தாடல் மேவிய அண்ணலாரடி போற்றி அஞ்சலிகோலிநின்
றேடு லாமலர் எட்டி னேடைந்து மாகும் என்னும் உறுப்பினால்
பீடு நீடு நிலத்தின்மேற் பெருகப் பணிந்து வணங்கினர்" (98)

என்று சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

## (5) பரஞ்ஜோதியார் திருவிளையாடற் புராணம்:—

இதில் அறுபத்தி நான்காவது படலத்தில் சொல்லப் பட்டுள்ள வன்னியுங் கிணறும், இலிங்கமும் அழைத்த வரலாறு திருப்புறம்பயத் தலபுராணத்தில் செட்டிப் பெண் சருக்கத்தில் காணப்படுகின்றது. ஆனால், சரித நிகழ்ச்சி யில் இரு புராணங்களும் சில இடங்களில் வேறுபடு கின்றன. இவ்விரண்டு புராணங்களையும் ஆராய்ந்து யான் கண்ட முடிபுகளை மதுரைத் தமிழ் சங்கத்துச் "செந்தமிழ்ப் பத்திரிகை" 12-ஆம் தொகுதி 7-ஆம் பகுதியில் 1914-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளேன்.

## (6) வேம்பற்றூர் நம்பி திருவிளையாடற் புராணம்:—

இதில் சான்றழைத்த திருவிளையாடல் என்ற பகுதி யில் திருப்புறம்பயம் புராணத்தில் காணப்படும் செட்டிப் பெண் வரலாறு கூறப்பட்டிருக்கிறது.

(7) சிவஞான முனிவர் பாடிய "சோமேசர் முது மொழி வெண்பாவிலும் சென்ன மல்லையர் "சிவசிவ" வெண்பாவிலும்" இத்தலத்தில் நடந்ததாகத் தல புராணத் தில் சொல்லப்பட்டுள்ள ஒரு நிகழ்ச்சி உதாரணமாக எடுத் துக் காட்டப் பெற்றிருக்கிறது. அப்பாடல்களை அடியிற் காண்க:—

"குற்றொருவர் கூறைகொண்டு கொன்றதிம்மை யேகூடல்
சொற்றதுகை கண்டோமே சோமேசா—அற்றூன்
மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு" (சோ. மு. வெ. தீவினை யச்சம்)

"புறம்பயத்து மின்னையுயிர் போக்கவந்தான் பட்ட
திறந்தெரி யாதோ சிவ சிவா = அறந்தார்
பிறர்க்கின்னா முற்பகல் செய்யில் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்''

## (8) தல புராணம்:-

இத்தலத்திற்கு வடமொழியில் ஒரு புராணமும், தமிழ் மொழியில் ஒரு புராணமும் இருக்கின்றன. இரண்டும் அச்சிடப் பெறவில்லை. தமிழ்ப் புராணத்தில் இறுதியிலிருந்த இரண்டு சருக்கங்கள் காணப்படவில்லை. அவை இறந்தனபோலும். இதில் 396 செய்யுட்கள் இருக்கின்றன. நூலாசிரியர் யாவர் என்பது புலப்படவில்லை. திருப்புறம்பயத்தில், அந்நாளிலிருந்த சாமிநாத பிள்ளை, சங்கரமூர்த்தி பிள்ளை, வைத்தியநாத பிள்ளை என்போர் கேட்டுக் கொண்டவாறு தல புராணத்தைத் தமிழ் மொழியில் தாம் பாடியதாக நூலாசிரியர் கூறியிருக்கிறார். இது சுமார் இருநூறு ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பெற்ற புராணமாக இருக்கலாம் என்பது பெரியோர்கள் கருத்து. இப்புராணம் பதின்மூன்று சருக்கங்கள் உடையது.

## (9) திருப்புறம்பயம் உலா:-

புராணம் பாடிய ஆசிரியரே இவ்வுலாவையும் பாடியிருக்கிறார் என்பது இந்நூலிலுள்ள சில குறிப்புக்களால் தெரிகிறது. இவ்வுலா முழுவதும் இந்நாளில் கிடைக்கவில்லை. சிதைந்து கிடந்த ஒரே ஏட்டுப் பிரதியிலிருந்து பேதைப் பருவம் வரையில் எழுத முடிந்தது; எஞ்சிய பகுதி அழிந்துவிட்டது. இஃது இனிய நடையில் அமைந்ததோர் நூலாகும். இதில் தல வரலாறு சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**(10) புறம்பயமாலை:-**

இது புறம்பயத் திறைவன் மீது பாடப்பட்ட 32 செய்யுட்களையுடைய ஒரு நூல்; அச்சிடப்படவில்லை.

**(11) கரும்புமை மாலை:-**

இது அம்பிகை மீது பாடப்பட்ட 32 செய்யுட்களை யுடைய ஒரு நூல். அச்சிடப்படவில்லை. இவ்விரண்டு மாலைகளையும் இயற்றியவர் பெயர் தெரியவில்லை. "சாட்சி நாதர் வெண்பா" என்ற நூல் ஒன்றிருந்ததாகச் சொல்லு கின்றனர். அஃது இக்காலத்தில் காணப்படவில்லை.

**(12)** அருணகிரிநாதர் தம் திருப்புகழில் திருச்செந்தூர் பாடலில் 'புறம்பயம் அமர் வோனே" என்று புறம்பயத் தெழுந்தருளியுள்ள முருகக் கடவுளைக் குறித்துள்ளனர்.

**(13) தலபுராணச் சுருக்கம்:-**

கி.பி. 14ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களும்கலம்பகத்திற் கிரட்டையர்களென்று அறிஞர்களால் பாராட்டப்பட்டவர் களாகிய இரட்டைப் புலவர்கள் தாம் பாடிய தில்லைக் கலம்பகத்தில்:-

"நன்றென மகிழ்தொரு சிதம்பர நடம்புரியு நம்பர்பானூர்
குன்றென உயர்ந்தவர் விரும்பிய பெரும்பதி குடந்தை கடவூர்
தென்குடி வலஞ்சுழி புறம்பயம் எறும்பிமலை செம்பியனலூர்
அன்பில் புறவம் பழனம் வஞ்சிகளம் இஞ்சிகுடியம்பர் நகரே.

என்ற 29-ம் பாடலில் புறம்பயத்தைக் கூறியுள்ளனர்.

**(1) பிரளயங்காத்த சருக்கம்:-**

இராகு அந்தரத்தில் நிகழ்ந்த ஒரு பிரளயம் சிவ பெருமான் ஆணையின்படி விநாயகரால் அடக்கப்பெற்ற மையும், அப்போது வருணன் கடல்படு பொருள்கள் கொண்டு அவ்விநாயகரை வழிபட்டமையும், அது பற்றி

அவர் பிரளயங்காத்த விநாயகர் என்று பெயர் எய்தியமையும் இச்சருக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

### (2) அரித்துவசச் சருக்கம்:-

மகத நாட்டு மன்னன் அரித்துவசன் என்பான் துருவாச முனிவர் சாபத்தினால், முயலக நோயுற்று பெருந்துன்பம் எய்தி இறுதியில் புறம்பயத் திறைவன்பால் வந்து வழிபட்டு அந்நோயைப் போக்கிக்கொண்ட வரலாறு இதில் கூறப்பட்டிருக்கிறது.

### (3) தீர்த்தச் சருக்கம்:-

இதில் பிரம தீர்த்தம், சத்தசாகர கூபம், சந்திர புட்கரணி, சூரிய புட்கரணி, என்பவற்றின் சிறப்புரைக்கப்பட்டிருக்கிறது.

### (4) தட்சிணாமூர்த்தி சருக்கம்:-

புறம்பயத் தெம்பெருமான் பிரம தீர்த்தத்தின் தென் கரையில் ஆலின் கீழ் எழுந்தருளிச் சனகர் முதலான முனிவர் நால்வர்க்கும், அக்னிதபசு என்ற முனிவர்க்கும், மெய்ப்பொருள் உணர்த்திய வரலாறு இதில் விளக்கப்பட்டுள்ளது.

### (5) திருவிழாச் சருக்கம்:-

மாசித் திங்களில் நடைபெறும் மக விழாச் சிறப்பும் தேர்ச் சிறப்பும் இதில் காணலாம்.

### (6) செட்டிப்பெண் சருக்கம்:-

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைக்குச்சென்ற வணிகன் ஒருவன் அரவினால் உயிர் துறக்க அவனோடு வந்த வணிக மங்கையின் வேண்டுகோட்கிரங்கிப் புறம்பயத் தெம்பெருமான் அவனுக்குயிரளித்ததோடு,

அவ்விருவருக்கும் மணம் புரிவித்தமையும், பின்னர் மதுரையில் அம்மாதை இழித்துப் பழித்துரையாடிய அவள் சகக்களத்தியாகிய மூத்தாள் உண்மையை உணர்ந்து கொள்ளுமாறு வன்னி, கிணறு, மடைப்பள்ளியோடு, அப்பெருமான் சான்று கூறினமையும், அது பற்றி அவர் சாட்சி நாதர் என்ற பெயர் அடைந்தமையும் இதில் கூறப்பட்டிருக்கின்றன.

**(7) கலைபிங்கள் சருக்கம்:-**

இது நாள்தோறும் திருக்கோயிலுக்கு விறகு கொணர்ந்த கோவந்தபுத்தூர் புலைஞர்குல அன்பர் ஒருவருக்கு இறைவன் வீடுபேறு அருளியதை உணர்த்துகின்றது.

**(8) வசந்த கலிகைச் சருக்கம்:-**

ஆதனூரிலிருந்த தன் காதலன்பால் சென்ற கோயிற் பணிமகள் ஒருத்தியின் அணிகலன்களைக் கவர்ந்து கொண்டு அவளைக்கொன்று மண்ணியாற்றில் தள்ளிய கொடியோனும், தவறி அவ்வாற்றில் வீழ்ந்து இறக்கவே, அவ்விருவருக்கும் இறைவன் நற்கதி அருளிய வரலாற்றை இதில் காணலாம்.

**(9) விந்தாசலச் சருக்கம்:-**

விந்தாசல வேந்தன் அகத்தியர் பாற்பெற்ற சாபத்தைப் புறம்பயத் திறைவனை வழிபட்டுத் தீர்த்துக்கொண்டமை இதில் சொல்லப்பட்டுளது.

**(10) அசுவத்தாமச் சருக்கம்:-**

துரோணர், தம் தீர்த்த யாத்திரையில் புறம்பயத் தெம்பிரானைப் பூசித்து அசுவத்தாமா என்ற புதல்வனை அடைந்தமை இதில் உரைக்கப் பெற்றுளது.

**(11) இமயமால் வரைச் சருக்கம்:-**

மகப்பேறின்றி வருந்திய இமயபருவதராஜன் அகத்திய முனிவர் கூறியவாறு புயம்பயத் திறைவனுக்கு வழிபாடாற்றிப் பார்வதி தேவியைப் புதல்வியாகப் பெற்ற வரலாற்றை இது கூறுகின்றது.

**(12) விசுவாமித்திரச் சருக்கம்:-**

வசிட்டரோடு மாறுபட்ட விசுவாமித்திரர் பிரம இருஷியாதற்குப் பல நாட்கள் தவம்புரிந்தும் அப்பேற்றைப்பெறாது இறுதியில் புறம்பயமமர்ந்த பெருமானை வழிபட்டு அச்சிறப்பை யடைந்த சரிதம் இதில் உள்ளது.

**(13) சுக்ரீவச் சருக்கம்:-**

வாலியால் துன்புறுத்தப்பெற்ற சுக்ரீவன் மதங்க முனிவர் ஏவலால் புறம்பயத்தை யடைந்து தவம்புரிந்து, இறைவன் திருவருள் துணைகொண்டு தன் பகைவனாகிய வாலியை வென்று கிட்கிந்தையை ஆட்சி புரியும் பேற்றை அடைந்தமை இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

**கல்வெட்டும் சரித்திரமும்:-**

இத்திருக் கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று விஜயநகர வேந்தன் காலத்தியது. மற்றவை எல்லாம் சோழ மன்னர் காலத்தியன ஆகும். அரசாங்கக் கல்வெட்டு இலாகா அதிகாரிகள் கி. பி. 1897 ஆம் ஆண்டில் 12 கல்வெட்டுகளும் 1927-ஆம் ஆண்டில் 35 கல்வெட்டுகளும் 1931-ஆம் ஆண்டில் 16 கல்வெட்டு களும் படி எடுத்துப் போயிருக்கின்றனர். முதலில் படி எடுத்த 12 கல்வெட்டுகளும் தென்னிந்திய கல்வெட்டுகள் என்ற அரசாங்க வெளியீட்டில் 6-ம் தொகுதியில் அச்சிடப் பட்டிருக்கின்றன. எஞ்சியவற்றைப்பற்றிய சுருக்கமான

செய்திகள், தென்னிந்தியக் கல்வெட்டு இலாகாவில் 1927,1932-ஆம் ஆண்டு அறிக்கைகளில் வெளிவந்துள்ளன. (Inscriptions 323 to 357 of 1927 and 146 to 161 of 1932) கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் திங்கள் வெளியீடான தமிழ்ப் பொழிலில் 12 கல்வெட்டுகள் நான் வெளியிட்டிருக்கிறேன். எல்லாக் கல்வெட்டுகளும் அருமையான வரலாற்றுண்மைகளை அறிவிக்கும் தகுதியுடையனவாய் இருக்கின்றன. அவை நம் தமிழகத்தில் பண்டைக் காலத்தில் சிறப்புடன் ஆட்சி புரிந்த செங்கோல் வேந்தர்களான சோழர்களது சரித்திரங்களை அறிதற்குப் பெரிதும் பயன் படும் என்பது திண்ணம். அன்றியும், திருக்கோயில், ஊர், இவற்றைப் பற்றிய பழைய செய்திகளையும் அவற்றால் அறியலாம்.

இப்போதுள்ள கருங்கற் கோயில் கி. பி. 870 முதல் 907 வரையில் தஞ்சையிலிருந்து ஆட்சி புரிந்த முதலாம் ஆதித்த சோழனால் கட்டப்பெற்றது என்று தெரிகிறது. கி. பி. 880-ல் திருப்புறம்பயத்தில் நிகழ்ந்த போரில் வெற்றி பெற்ற ஆதித்த சோழன், புறம்பயத்திறைவன்பால் ஈடுபட்டுச் செங்கற் கோயிலாகவிருந்த இதனைக் கருங்கற் கோயிலாக அமைத்து, இதற்கு ஆதித்தேசுவரம் என்ற பெயரும் வழங்கியுள்ளனன். இக்கோயிற்கு ஆதித்தேசுவரம் என்ற பெயர் உளது என்பது இதிலுள்ள இரண்டு கல்வெட்டுகளால் புலப்படுகின்றன. ஆதித்தன் புதல்வனாகிய முதற் பராந்தக சோழன் (கி. பி. 907-கி. பி. 953.) ஆட்சியின் 16-ஆம் ஆண்டு கல்வெட்டு, அவன் பாண்டி நாட்டையும், ஈழ நாட்டையும், வென்ற செய்தியை உணர்த்துகின்றது. ஒன்பதாம் திருமுறையிலுள்ள ஒரு பதிகம் பாடிய முதற் கண்டராதித்த சோழர் மனைவியார் செம்பியன் மாதேவியார், தம் புதல்வன் உத்தம சோழன் நலன் குறித்துப் புறம்பயமுடைய பெருமானுக்குத் திருமஞ்சன நீராடியருள வெள்ளிக்கலசம் ஒன்று அளித்துள்ளனர் என்பது ஒரு கல்வெட்டால் தெரிகிறது. இரண்டாம் பராந்தக சோழன் முதல்மகன் ஆதித்த கரிகாலன் ஆட்சிக்

காலத்தில் இருந்த இருமடி சோழப் பெரும்படையினர் திருப்புறம்பயத்தில் நந்தவனம் ஒன்று அமைத்து அதனைப் பாதுகாத்தற்கு ஆறுமா நிலம் இறையிலியாக விட்டனர் என்பதை ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. முதல் இராஜ ராஜ சோழன் அதிகாரிகளில் ஒருவனாகிய வானவன் மூவேந்த வேளான் என்பான், திருக்கோயிலில் அஷ்டபரிவார தெய்வங்களை எழுந்தருளுவித்து அவற்றிற்கு நாள் வழிபாட்டிற்கு நிபந்தங்களும் விட்டான் என்பது ஒரு கல் வெட்டால் அறியப்படுகிறது. எனவே, கி. பி. 985 முதல் கி. பி. 1014 வரையில் நடைபெற்ற முதல் இராஜ ராஜ சோழன் ஆட்சியில்தான் அம்பிகைக்குத் தனிக்கோயில் அமைக்கப் பெற்றது என்பது வெளியாகின்றது. இந்த வானவன் மூவேந்த வேளான், புறம்பயத் திறைவனிடத்தில் அளவற்ற பக்தியுடையவனாக விருந்தனன் என்பது தெரிகிறது. இவன் 150 கழஞ்சில் மூன்று பொற்பட்டமும், 5 கழஞ்சில் பொற்பூவும், 43 கழஞ்சில் வெள்ளி வட்டிலும், செய்து அப்பெருமானுக்கு அளித்த செய்தி ஒரு கல்வெட்டால் புலனாகின்றது. முதல் இராஜ ராஜ சோழன் காலத்தில், ஒரு தலைவனால் ஸ்ரீ பலிக்குப் பொன் வட்டில் செய்தளிக்கப்பட்டுள்ளது. இராஜ ராஜ சோழன் பணி மகன் குவலய சுந்தரன் என்பவனால், நாள்தோறும் இறைவனுக்குத் தும்பைப்பூ சாத்துவதற்கு நிபந்தமாகப் பொன் கொடுக்கப்பட்டுள்ளது.

முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியின் 43-ஆம் ஆண்டில் கி. பி. 1113-ல் பங்குனித் திருநாளுக்கும், திருவேட்டைக்கும், நிபந்தமாகத் திருவெள்ளறை நல்லூரில் அரசனால் நிலம் விடப்பட்டிருக்கிறது. அரிவாள் தாயன், சிறுத்தொண்டன், வன்றொண்டன், சண்டேசுவரன், இயற்பகை, கோட்புலி, விறன் மிண்டன், அணுக்க நம்பி என்ற பெயருடையவர்கள் ஐப்பசித் திருவிழா, பங்குனித் திருவிழா, திருவேட்டை, தீர்த்தங்கட்கு நிபந்தமாக நிலம் விட்டிருக்கின்றனர். விக்கிரம சோழன் ஆட்சி காலத்தில்,

முடிகொண்ட சோழப் பல்லவரையன் என்பவன், சைவ சமயாச்சாரியார் மூவர்க்கும் நாள்வழி பாட்டிற்கு நிலம் கொடுத்துள்ளான். இரண்டாம் இராஜ ராஜன் ஆட்சியில் (கி. பி. 1173 ல்) ஆண்டவர் கடியாபரணர் யாத்திரிகர்கட்கு உணவளிப்பதற்கு 40 பொன் கொடுத்துள்ளார். மூன்றும் குலோத்துங்க சோழன் ஆட்சியில், ஆலங்குடையான் அடிகள் புறம்பயனும், திருச்சிற்றம்பல முடையானும், சோமாஸ்கந்தர், அம்பிகை, கூத்தாடுந் தேவர், பிராட்டியார், பிள்ளையார், முத்துமுளைக்கன்று, அறம்பயந்த பிள்ளையார் இவர்கட்கு அமாவாசைதோறும், திருமஞ்சனத்திற்கும், திருவமுதுக்கும் நிலம் விட்டிருக்கின்றனர். இவ்வேந்தன் ஆட்சியில் கி. பி. 1215-ல் வீதிவிடங்க விழுப்பரையனும், அவன் தம்பி அகிலநாயக விழுப்பரையனும், திருக்கோயில் முதற் பிராகாரத்தில் திருச்சுற்று மாளிகையில், திருவலஞ்சுழிப் பெருமானையும், புற்றிடங்கொண்ட பெருமானையும், மூன்றும் பிராகாரத்தில் கோபுர வாயிலின் பக்கத்தில் அறமுரைத்த நாயனுரையும் (தக்ஷிணமூர்த்தி)எழுந்தருளுவித்து கி. பி. 1235-ல் பூசைக்கு நிலம் விட்டுள்ளனர். மூன்றும் இராஜ ராஜ சோழன் ஆட்சியில் கி. பி. 1239-ல் குந்தவைநல்லூர்ச் சபையார் புறம்பயத்திறைவனுக்கு நாள்வழிபாட்டிற்கு நிலம் கொடுத்திருக்கின்றனர். மூன்றும் இராஜேந்திர சோழன் ஆட்சியில் நிலம் அளித்து செங்கழுநீர் மலர் இறைவனுக்குச் சாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விஜய நகர வேந்தன் விருபாட்சிராயன் ஆட்சியில் கி. பி. 1485-ல் புறம்பயத்திறைவற்குப்பல ஊர்களிலுமுள்ள நிலங்கட்கெல்லாம் அரசாங்க வரி தள்ளிக்கொடுக்கப்பட்டு அப்பொருள் கொண்டு மகவிழா நடத்துமாறு மகாமண்டலேசுவரன் கோனேரி தேவமகாராஜாவினுல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பல கல்வெட்டுகள் கோயிலில் நுந்தா விளக்குகளும், சந்திவிளக்குகளும் வைப்பதற்குக் கொடுக்கப்பட்ட நிபந்தங்களைத் தெரிவிக்கின்றன. அக்காலத்தில் திருப்புறம்பயத்தில் சங்கரப்பாடியார், என்ற ஒரு வகை வணிகர்களும் வளஞ்

சியர் என்ற ஈழநாட்டு வணிகர்களும் இருந்தனர் என்பதும், இவ்வூரிலுள்ள ஒரு தெருவிற்கு விரையாக்கலிப் பெருந் தெரு என்ற பேர் இருந்தது என்பதும், தாமோதர விண்ணகரம் என்ற பெருமாள் கோயில் ஒன்று இருந்தது என்பதும், கடியாபரணர் மடம் என்றதோர் மடம் இருந்தது என்பதும், திருக்கோயிற்கு மூன்று பிராகாரங்கள் இருந்தன என்பதும், சோழ மன்னர்களது சேனுதிபதி, அமைச்சர், முதலானேரில் சிலர் இவ்வூரில் அக்காலத்தில் இருந்தனர் என்பதும், அந்நாளில் பங்குனி மாதத்தில் கோயிலில் திருவிழா நடைபெற்றது என்பதும், மண்ணியாற்றிற்குக் குஞ்சரமல்லன் என்ற பெயர் வழங்கிற்று என்பதும் மற்றுஞ் சில செய்திகளும், இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகளால் வெளியாகின்றன.

திருப்புறம்பயம் என்னும் கிராமம் சோழ மண்டலத்தில் இராஜேந்திர சிங்கவள நாட்டில் அண்டாட்டுக் கூற்றத்தில் நின்று நீங்கிய தேவதானம் என்று கல்வெட்டுகள் எல்லாம் உணர்த்துவதால், கிராமம் முழுவதும் புறம்பயமுடைய பெருமானுக்கு உரியதாக இருந்தது என்று தெரிகிறது. திருப்புறம்பயத்தில் உட்சுற்று மனேகளில் குடியிருப்போர் தென்னே மரம் ஒன்றிற்கு இருபது தேங்காய்கள் திருக்கோயிலுக்குத் தருதல் வேண்டும் என்று மூன்ரும் இராஜ ராஜ சோழன் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட உத்தரவு ஒன்று கல்வெட்டுகளில் காணப்படுவதும் இச் செய்தியை வலியுறுத்துகின்றது. அன்றியும் கண்ணங்குடி, கீழக்கண்ணங்குடியில் விடு நிலம், சேர்வையான நிலம், கோயிற்பற்று, ஆலத்தும்மேடு, மேல்காவேரிப் பற்று, கருப்பூர், சீல சிந்தாமணி, வேம்பற்றூர் பத்தாங்கட்டளே, ஏறுபாடியானபேட்டை, சிற்ரூமூர், சிதடக்குடி ஆகிய ஊர்கள் புறம்பயத் திறைவனுக் குரியனவாயிருந்தன என்பது ஒரு கல்வெட்டால் புலப்படுகிறது.

**பிற குறிப்புகள்:-**

முன்னளில் அம்பிகையின் திருக்கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதியுடையதாக இருந்தது என்று தெரிகிறது.

நாகூர் செட்டியார் ஒருவர், அம்பிகையைத் தன் குலதெய்வமாகக்கொண்டு வழிபட்டு வரும் நாட்களில் அக்கோயிலைத் தெற்கு நோக்கிய சந்நிதியுடையதாக மாற்றியமைத்து விட்டாராம். அவர் படிமம் ஒன்று அம்பிகையின் திருக்கோயிலுள் கூப்பிய கைகளுடன் நின்ற கோலத்தில் இருப்பதை இன்றுங்காணலாம். திருப்புறம்பயத்திலிருந்து கும்பகோணத்திற்குக் கோடை காலத்தில் போவதற்குரிய குறுக்கு வழியில் ஏராகரத்திற்குத் தென்புறத்தில் வயல்களுக்கு நடுவில் உள்ள பெருங்குளத்தை வெட்டுவித்தவரும் சிவநேசச் செல்வராகிய அச்செட்டியாரேயாவர். சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர், கோயில் மகா மண்டபம் முதலானவற்றை உயரத் தூக்கிக் கட்டியவர் மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனத்தின் அடியார்குழாங்களுள் ஒருவராகிய ஸ்ரீ சிதம்பரநாதத்தம்பிரான் சுவாமிகள் ஆவர். அவர்கள் படிமத்தை அம்பிகையின் சந்நிதிக்கு வெளியேயுள்ள பெரிய மண்டபத்தின் கற்றூணில் இன்றும் பார்க்கலாம். திருக்கோயில் சந்நிதியில் கிழக்கே ஒரு மடம் உளது. இம்மடம் திருக்கோயிலின் பரம்பரை டிரஸ்டியாகவுள்ள மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்திற்கு உரியதாகும். இதற்கு மேற்கே ஒரு மடம் இருந்தது என்றும், அது மேற்குறித்த நாகூர்ச் செட்டியாரால் கட்டப்பெற்றது என்றும் வயது முதிர்ந்த பெரியவர்கள் கூறுகின்றனர். அந்த மடம் இந்நாளில் காணப்படவில்லை. திருமாலுக்குப் புதியதாகக் கட்டப்பெற்ற கோயில் ஒன்று தெற்குத் தெருவில் உளது. அன்றியும், மாரியம்மன், ஐயனர், பொன்னியம்மன் (பிடாரி), திரௌபதியம்மன் ஆகிய கிராம தெய்வங்கட்கும் கோயில்கள் இருக்கின்றன. ஊருக்கு வடகிழக்கில் மண்ணியாற்றுக்கு அண்மையில் யாழ்ப்பாணத்து ஸ்ரீ ஆறுமுகதேசிக சுவாமிகள் மடம் இருக்கின்றது. அது சுமார் 80 ஆண்டுகட்கு முன்னர் வேதாந்த சாஸ்திரங்களில் வல்லுநராகவும் சிவாநுபூதிச் செல்வராகவும் விளங்கிய அவ்வடிகள் சமாதிகொண்டெழுந்தருளிய இடம் ஆகும். அவர்கள், திருஷ்டாந்த

தாஷ்டாந்த விளக்கம், நவநீதசாரம் முதலான வேதாந்த நூல்கள் அருளிய பெரியார் ஆவர்.

மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தின் தலைவர் அவர்கள் சென்ற ஆண்டில் திருப்புறம்பயத்தில் தேவார பாடசாலை ஒன்று அமைத்து நடத்திவருவதோடு, நாள்தோறும் புறம்பயத்தெம்பெருமான் திரு முன்னர் தேவாரப்பதிகங்கள் இன்னிசையோடு ஓதி வருதற்கும் உரிய ஏற்பாடுகள் செய்துள்ளார்கள். சைவசமய முதற் பரமாச்சாரியராகிய திருஞானசம்பந்த சுவாமிகள் திரு மடாலயத்தில் அவ்வடிகளின் ஞான மரபில் எழுந்தருளியுள்ள ஆதீனத்தலைவர் அவர்களின் சைவ சமயத்தொண்டு மிகமிகப் பாராட்டற்பாலதாகும்.

**கோயில் நிர்வாகம்:-**

மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தின் தலைவர் அவர்கள், இத்திருக்கோயிலுக்கும் பரம்பரை தர்மகர்த்தாவாக இருந்து வருகிறார்கள். 1940-ம் ஆண்டிலிருந்து இந்து மத அறநிலையப்பாது காப்புக் கழகத்தார் ஆதீனத் தலைவர் அவர்களுடன் கலந்துகொண்டு ஒரு நிர்வாக உத்தியோகஸ்தரை நியமனஞ் செய்திருக்கின்றனர். இதற்குச் சுமார் 230-94 ஏக்கர்கள் நன்செய் புன்செய் தோப்புகள் இருக்கின்றன.

உ

# திருப்புறம்பயப் பாடல்கள்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

### திருவிராகம் பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறம்பய மலைந்தவர் மதிற்பரி சறுத்தனை
நிறம்பசுமை செம்மையொ டிசைந்துனது நீர்மை
திறம்பய னுறும்பொருள் தெரிந்துணரு நால்வர்க்
கறம்பய னுரைத்தனை புறம்பய மமர்ந்தோய்.

விரித்தனை திருச்சடை அரித்தொழுகு வெள்ளம்
தரித்தனை யதன்றியு மிகப்பெரிய காலன்
எருத்திற வுதைத்தனை இலங்கிழையொர் பாகம்
பொருத்துதல் கருத்தினை புறம்பய மமர்ந்தோய்.

விரிந்தனை குவிந்தனை விழுங்குயி ருமிழ்ந்தனை
திரிந்தனை குருந்தொசி பெருந்தகையு நீயும்
பிரிந்தனை புணர்ந்தனை பிணம்புகு மயானம்
புரிந்தனை மகிழ்ந்தனை புறம்பய மமர்ந்தோய்.

வளங்கெழு கடும்புன லொடுஞ்சடை யொடுங்கத்
துளங்கம ரிளம்பிறை சுமந்தது விளங்க
உளங்கொள் வளைந்தவர் சுடுஞ்சுடலை நீறு
புளங்கொள விளங்கினை புறம்பய மமர்ந்தோய்.

பெரும்பிணி பிறப்பினொ டிறப்பிலையொர் பாகம்
கரும்பொடு படுஞ்சொலின் மடந்தையை மகிழ்ந்தோய்
சுரும்புண வரும்பவிழ் திருந்தியெழு கொன்றை
விரும்பினை புறம்பய மமர்ந்த இறையோனே.

அனற்படு தடக்கையவ ரெத்தொழில ரேனும்
நினைப்புடை மனத்தவர் வினைப்பகையு நீயே
தனற்படு சுடர்ச்சடை தனிப்பிறையொ டொன்றப்
புனற்படு கிடக்கையை புறம்பய மமர்ந்தோய்.

மறத்துறை மறுத்தவர் தவத்தடிய ருள்ளம்
அறத்துறை பொறுத்துன தருட்கிழமை பெற்றோர்
திறத்துள திறத்தினை மதித்தகல நின்றும்
புறத்துள திறத்தினை புறம்பய மமர்ந்தோய்.

இலங்கைய ரிறைஞ்சிறை விலங்கலின் முழங்க
உலங்கெழு தடக்கைக ளடர்த்திடலு மஞ்சி
வலங்கொள வெழுந்த வனலங்கவின வஞ்சு
புலங்கொள விலங்கினை புறம்பய மமர்ந்தோய்.

வடங்கெட நுடங்குண விடந்தவிடை வல்லிக்
கிடந்தவ னிருந்தவ னளந்துணர லாகார்
தொடர்ந்தவ ருடம்பொடு நிமிர்ந்துடன் வணங்கப்
புடங்கருள்செய் தொன்றினை புறம்பய மமர்ந்தோய்.

விடக்கொருவர் நன்றென விடக்கொருவர் தீதென
உடற்குறை களைந்தவ ருடம்பினை மறைக்கும்
படக்கர்கள் பிடக்குரை படுத்துமையொர் பாகம்
அடக்கினை புறம்பயம் அமர்ந்த உரவோனே.

கருங்கழி பொருந்திரை கரைக்குலவு முத்தம்
தருங்கழு மலத்திறை தமிழ்க்கிழமை ஞானன்
சுரும்பவிழ் புறம்பய மமர்ந்ததமிழ் வல்லார்
பெரும்பிணி மருங்கற வொருங்குவர் பிறப்பே.

---

# திருநாவுக்கரசு நாயனர்

## திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கொடிமாட நீடெருவு கூடல் கோட்டூர்
கொடுங்கோளூர் தண்வளவி கண்டி யூரும்
நடமாடு நன்மருகல் வைகி நாளும்
நலமாகு மொற்றியூ ரொற்றி யாகப்

படுமாலை வண்டறையும் பழனம் பாசூர்
பழையாறும் பாற்குளமும் கைவிட் டிந்நாள்
பொடியேறு மேனியராய்ப் பூதஞ் சூழப்
புறம்பயநம் மூரென்று போயி னாரே

முற்றொருவர் போல முழுநீ றாடி
முளைத்திங்கள் சூடிமுந் நூலும் பூண்டு
ஒற்றொருவர் போல வுறங்கு வேன்கை
ஒளிவளையை ஒன்றொன்றா எண்ணுகின்றார்
மற்றொருவ ரில்லைத் துணை எனக்கு
மால்கொண்டாற் போல மயங்கு வேற்குப்
புற்றரவக் கச்சார்த்துப் பூதஞ் சூழப்
புறம்பயநம் மூரென்று போயினாரே

ஆகாத நஞ்சுண்ட அந்தி வண்ணர்
ஐந்தலைய மாசுணங்கொண் டம்பொற் றோள்மேல்
ஏகாச மாவிட்டோ டொன்றேந்தி வந்
திடுதிருவே பலியென்றார்க் கில்லே புக்கேன்
பாகேதுங் கொள்ளார் பலியுங் கொள்ளார்
பாவியேன் கண்ணுளே பற்றி நோக்கிப்
போகாத வேடத்தர் பூதஞ் சூழப்
புறம்பயநம் மூரென்று போயி னாரே

பன்மலிந்த வெண்டலை கையி லேந்திப்
பனிமுகில் போல் மேனிப் பவந்த நாதர்
நென்மலிந்த நெய்த்தானம் சோற்றுத்துறை
நியமம் துருத்தியும் நீடூர் பாச்சில்
கன்மலிந் தோங்கு கழுநீர்க் குன்றம்
கடனாகைக் காரோணம் கைவிட் டிந்நாள்
பொன்மலிந்த கோதையரும் தாமும் எல்லாம்
புறம்பயநம் மூரென்று போயி னாரே

செத்தவர்தந் தலைமாலை கையி லேந்திச்
சிரமாலை சூடிச் சிவந்த மேனி
மத்தகத்த யானை யுரிவை மூடி
மடவா ளவளோடு மானொன் றேந்தி

அத்தவத்த தேவ ரறுப தின்மர்
ஆறுநா ருயிரவர்க் காடல் காட்டிப்
புத்தகங்கைக் கொண்டு புலித்தோல் வீக்கிப்
புறம்பயநம் மூரென்று போயி னாரே

நஞ்சடைந்த கண்டத்தர் வெண்ணீ றாடி
நல்லபுலி யதண்மே லாகங் கட்டிப்
பஞ்சடைந்த மெல்விரலாள் பாக மாகப்
பராய்த்துறையே னென்றோர் பவள வண்ணர்
துஞ்சிடையே வந்து துடியும் கொட்டத்
துண்ணெனன் றெழுந்திருந்தேன் சொல்ல மாட்
புன்சடையின் மேலோர் புனலும் சூடிப்
புறம்பயநம் மூரென்று போயி னாரே

மறியிலங்கு கையர் மழுவொன் றேந்தி
மறைக்காட்டே னென்றோர் மழலை பேசிச்
செறியிலங்கு திண்டோண்மேல் நீறு கொண்டு
திருமுண்ட மாவிட்ட திலக நெற்றி
நெறியிலங்கு கூந்தலார் பின்பின் சென்று
நெடுங்கண் பனிசோர நின்று நோக்கிப்
பொறியிலங்கு பாம்பார்த்துப் பூதஞ் சூழப்
புறம்பயநம் மூரென்று போயினாரே

நில்லாதே பல்லூரும் பலிகள் வேண்டி
நிரைவளையார் பலிபெய்ய நிறையுங் கொண்டு
கொல்லேறுங் கொக்கரையும் கொடுகொட் டியுங்
குடமூக்கி லங்கொழியக் குளிர்தண் பொய்கை
நல்லாளை நல்லூரே தவிரே னென்று
நறையூரிற் றாமுந் தவிர்வார் போலப்
பொல்லாத வேடத்தர் பூதஞ் சூழப்
புறம்பயநம் மூரென்று போயி னாரே.

விரையேறு நீறணிந்தோ ராமை பூண்டு
வெண்டோடு பெய்திடங்கை வீணை யேந்தித்
திரையேறு சென்னிமேற் றிங்க டன்னைத்
திசைவிளங்க வைத்துகந்த செந்தீ வண்ணர்

அரையேறு மேகலையாள் பாக மாக
வாரிடத்தி லாட லமர்ந்த வையன்
புரையேறு தாமேறிப் பூதஞ் சூழப்
புறம்பயநம் மூரென்று போயி னரே

கோவாய விந்திரனுள் ளிட்டா ராகக்
குமரனும் விக்கினவி நாய கன்னும்
பூவாய பீடத்து மேலய னும்
பூமியளந் தானும் போற்றி சைப்பப்
பாவாய இன்னிசைகள் பாடி யாடிப்
பாரிடமும் தாமும் பரந்து பற்றிப்
பூவார்ந்த கொன்றை பொறிவண் டார்க்கப்
புறம்பயநம் மூரென்று போயி னரே.

---

## சுந்தரமூர்த்தி நாயனர்

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

அங்கமோதியோ ராரைமேற்றளி நின்றும் போந்துவந் தின்னம்பர்த்
தங்கினேமையு மின்னதென்றில ரீசனுரெழு நெஞ்சமே
கங்குலேமங்கள் கொண்டு தேவர்க ளேத்தி வானவர் தாந்தொழும்
பொங்குமால் விடையேறி செல்வப் புறம்பயந் தொழப் போதுமே.

பதியும்சுற்றமும் பெற்றமக்களும் பண்டையாரலர் பெண்டிரும்
நெதியிலிம்மனை வாழும்வாழ்க்கையு நினைப்பொழி மடநெஞ்சமே
மதியஞ்சேர் சடைக்கங்கையானிட மகிழுமல்லிகை செண்பகம்
புதியபூமலர்ந் தெல்லிநாறும் புறம்பயந்தொழப் போதுமே.

புறந்திரைந்து நரம்பெழுந்து நரைத்துநீ யுரையாற் றளர்ந்
தறம்புரிந்து நினைப்பதாண்மை யரிதுகாண தறிதியேல்
திறம்பியாதெழு நெஞ்சமே சிறுகாலை நாமுறு வாணியம்
புறம்பயத்துறை பூதநாதன் புறம்பயம்தொழப் போதுமே.

குற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள்சூழ்ந்த களவெலாம்
செற்றொருவரைச் செய்ததீமைகள் இம்மையேவரும் திண்ணமே
மற்றொருவரைப் பற்றிலேன் மறவாதெழு மடநெஞ்சமே
புற்றரவுடைப் பெற்றமேறி புறம்பயம் தொழப் போதுமே.

கள்ளிநீசெய்த தீமையுள்ளன பாவமும்பறை யும்படி
தெள்ளிதாஎழு நெஞ்சமே செங்கண் சேவுடைச் சிவலோகனூர்
துள்ளிவெள்ளிள வாளைபாய்வயற் றேன்றுதாமரைப் பூக்கண்மேல்
புள்ளிநள்ளிகள் பள்ளிகொள்ளும் புறம்பயம்தொழப்போதுமே.

படையெலாம் பகடார வாளிலும் பௌவஞ்சூழ்ந்தர சாளிலும்
கடையெலாம் பிணைத்தேரைவால் கவலாதெழு மடநெஞ்சமே
மடையெலாங் கழுநீர் மலர்ந்து மருங்கெலாங் கரும்பாடத்தேன்
புடையெலா மணநாறு சோலைப் புறம்பயம்தொழப் போதுமே.

முன்னைச்செய்வினை இம்மையின்வந்து மூடுமாதலின் முன்னமே
என்னைநீ தியக்காதெழு மடநெஞ்சமே எந்தை தந்தையூர்
அன்னச் சேவலோ டுடிப்பேடைகள் கூடிச்சேரு மணிபொழில்
புன்னைக் கன்னிகளக்கரும்பு புறம்பயந்தொழப் போதுமே

மலமெலாமறு மிம்மையே மறுமைக்கு வல்வினை சார்கிலா
சலமெலாமொழி நெஞ்சமே எங்கள் சங்கரன் வந்துதங்குமூர்
கலமெலாங்கடன் மண்டு காவிரி நங்கையாடிய கங்கைநீர்
புலமெலா மண்டிப் பொன்விளைக்கும் புறம்பயந்தொழப் போதுமே.

பண்டரீயன செய்ததீமையும் பாவமும் பறையும்படி
கண்டரீயன கேட்டியேல் கவலாதெழு மடநெஞ்சமே
தொண்டரீயன பாடித்துள்ளிநின் றாடிவானவர் தாந்தொழும்
புண்டரீக மலரும்பொய்கை புறம்பயந்தொழப் போதுமே.

துஞ்சியும் பிறந்துஞ் சிறந்துந் துயக்கறாத மயக்கிவை
அஞ்சியூரன் திருப்புறம்பயத் தப்பனைத்தமிழ்ச் சீரினால்
நெஞ்சினாலே புறம்பயந்தொழு துய்துமென்று நினைந்தன
வஞ்சியா துரைசெய்ய வல்லவர் வல்லவானுல காள்வரே.

---

## திருவாசகம்

கீர்த்தித்திருவகவல்

90. புறம்பய மதனில் அறம்பல அருளியும்.

**மாணிக்கவாசகர்.**

முற்றிற்று.